Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-764)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 24 (27.04.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 206

# படையினரின் முன்னைய ஆட்லறி நிலையில்

# ஆனையிறவு தளத்தின் வெற்றிப் பெருவிழா!

## நாளை நடாத்த முழு அளவில் ஏற்பாடு

(கிளிநொச்சி)

**இராணுவத்தின் வசமிருந்த ஆனையிறவுத் தளத்தினைத் தகர்த்து விடுதலைப் புலிகள் வெற்றிகொண்டமையையும், ஆனையிறவுத் தளத்தினை மீளவும் கைப்பற்றும் நோக்குடன் இராணுவம் பெருமெடுப்பில் மேற்கொண்ட 'தீச்சுவாலை' நடவடிக்கை முறியடிக்கப்பட்டமையையும் கூறும் வெற்றிப் பெருவிழா, பளைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அரங்கில் நாளை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.**

இந்த அரங்கம் அமைக்கப்பட்டுள்ள பகுதியே, முன்னர் இராணுவத்தினரின் ஆட்லறித் தளமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றிப் பெருவிழாவில் போர்முனைத் தளபதிகள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

போராளிகளினதும், கலைஞர்களினதும் கலை வடிவங்களும், மட்டக்களப்பு பாடும் மீன் இசைக் குழுவினரதும், யாழ்.மாவட்ட அருணா இசைக் குழுவினரதும் புரட்சிகர எழுச்சிப் பாடல்களும் இடம்பெறவுள்ளன.

இப்பெருவிழாவில், ஏராளமான மக்கள் பங்கேற்கவுள்ளதால், யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் இலவச போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வெற்றிப் பெருவிழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

### ஜப்பானிய உதவி வழங்கும் மாநாட்டில்

## புலிகளை பங்கேற்க வைக்க அரசு நகர்வுகளைச் செய்யும்

விடுதலைப் புலிகளை எவ்வகையிலும் ஜப்பானிய உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்ற வைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் - புலிகள் கேட்டுக்கொண்டதன்படி, சில முக்கிய நகர்வுகளைச் செய்ய அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாக - அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியேயான இராணுவ நிலைகளை மாற்றுதல், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல் ஆகிய விடயங்களில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளை மேற்கொள்ள அரசாங்கம் சில நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி தாம் மிகுந்த கவனம் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம்களுக்கு எவரும் இடையூறு செய்யவேண்டாம்

### யாழ்.அரசியற்துறை பொறுப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து சென்று மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்கள் - தமது இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதற்கு எவரும் இடையூறு புரியவேண்டாம் என, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கேட்டுக்கொணடுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.முஸ்லிம் மக்களுடன் புதிய பள்ளிவாசலில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். முஸ்லிம் மக்களின் மனங்கள் புண்படும் வகையில் சிலர் நடந்து கொள்கின்றனர். அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாமல், அவர்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க அனைவரும் முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் பதில் நடவடிக்கையை புலிகள் எதிர்பார்த்திருக்கின்றனர்

### 'சண்டே லீடருக்கு' தமிழ்ச்செல்வன் பேட்டி

போரினால் பாதிக்கப்பட்ட வட - கிழக்குப் பகுதியில் குறிப்பாக வன்னியிலும், யாழ். குடாநாட்டிலும் அரசு உறுதியளித்ததுபோல் மீள்கட்டுமானப் பணிகளை உடனடியாக ஆரம்பித்து, இப்பகுதிகளில் வழமை நிலையைக் கொண்டுவரவேண்டும் என, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழான 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து அவர் இச் செவ்வியை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் வறுமைக்கோட்டின் கீழ் 30 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. இரு தசாப்தகாலமாக மக்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தநிறுத்த ஒப்பந்தம்

(10 பக்கம் பார்க்க)

## பிரதமரின் செயலர் பிரட்மன் படையதிகாரிகளுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன், நேற்று வடபகுதி இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று நண்பகல் - யாழ். குடாநாட்டுக்கு விஜயம்செய்த பிரட்மன் வீரக்கோன், மதியம் பலாலியில் இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் - யாழ். நிலைவரம் தொடர்பாகவும் அவர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர், இவர் குடாநாட்டில் சில பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டதுடன், யாழ். அரச அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேவேளை - இன்று காலை 10 மணிக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் அரச செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றிலும் பிரதமரின் செயலர் பிரட்மன் பங்குபற்றவுள்ளார். (லி)

### *விண்ணாணம் விநாசியர்*



உஷார் குடுத்தாத்தான் உருப்படியா செய்ய யோசிக்கினம் போல...!

## விசேட தூதுவர் அகாஷி வன்னி செல்ல முடிவு!

ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட தூதுவர் யசுசி அகாஷி, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையைத் தளர்த்தி புலிகளை மீண்டும் பேச்சுக்களில் பங்கேற்கச் செய்யுமுகமாக வரும் சனியன்று வன்னிக்குச் செல்லவுள்ளதாக ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகுவதான தமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக அவர் இத்திடீர்ப் பயணத்தை மேற்கொள்வதாகவும் -

அதற்கு முதலில் கொழும்பில் வைத்து - ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களை அவர் சந்திக்கவிருப்பதாகவும் ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.



யாழ். பல்கலையில் நடைபெற்ற தந்தை செல்வாவின் 26 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில், நினைவுரையாற்றிய தமிழகப் பேராசிரியர் க.ப. அறவாணனுக்கு இரா.சம்பந்தன் எம்.பி. பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

## தேசிய எழுச்சிப் பேரவை யாழ்ப்பாணத்தில் அமைப்பு

தமிழ் பேசும் மக்களின் அரசியல் வேணவாக்களை நிறைவேற்ற தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் - தமிழ் பேசும் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பவற்றை மீளக்கட்டியெழுப்பி உறுதியான அரசியல் நெறிமுறைகளில் நின்று சமூக, பொருண்மிய, பண்பாட்டு வாழ்நிலையை மேம்படுத்துமுகமாக பொருத்தமான வேலைத்திட்டங்களை வகுத்து செயற்படுத்தி சேவையாற்றுவதற்காக, தேசிய எழுச்சிப் பேரவை உருவாக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பக் கூட்டம், யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி ஆரம்பக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பேரவையின் நோக்கம் பற்றி விளக்கியதுடன்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612656, 01-390128

(சி-730)

# கற்கோவளத்தில் சிறான் உதவியுடன் ஐஸ் தொழிற்சாலை அமைக்க திட்டம்!

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் "சிறான்" உதவியுடன் ஐஸ் தொழிற்சாலை ஒன்றைக் கற்கோவளத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட கடற்தொழில் உதவிப் பணிப்பாளர், ஐஸ் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு கற்கோவளத்தில் அரச காணி ஒன்றை ஒதுக்கித் தருமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலரை கடிதமூலம் கேட்டுள்ளார்.

வடமராட்சி வடக்கில் கற்கோவளம் தொடக்கம் தொண்டமனாறு வரையான கடற் பிரதேசத்தில் பிடிக்கப்படும் மீன்களைச சந்தைப் படுத்த முடியாமல் இருக்கிறது. ஐஸ் இல்லாத காரணத்தினால் குறைந்தளவு மீன்களையே விற்கும் நிலையில் இப்பகுதி மீனவர்கள் உள்ளனர்.

ஐஸ் தொழிற்சாலை இருந்திருந்தால், தொழிலாளர்கள் பிடிக்கும் மீன்களை தாமே ஐஸ் இட்டு நேரடியாகக் கொழும்பிற்கு அனுப்பி நல்ல விலையைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கற்கோவளத்தில் தனிப்பட்ட நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வந்த ஐஸ் தொழிற்சாலை யுத்த அனர்த்தங்களால் அழிக்கப்பட்டு, அவற்றில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். இராணுவத்தினர் வெளியேறிய பின்னர் இக்கட்டடம் மாத்திரம் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

(17)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இளைஞன், வீதியோரத்தில் மாடு கட்டப்பட்டிருந்த கயிற்றுக்குள் சிக்கி கழுத்துப் பகுதி வெட்டப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை கோப்பாய் பொலிஸ் நிலையத்தினருகே நடைபெற்றது. இதில் உரும்பிராயைச் சேர்ந்த ஜோன் பிரதாபன் கௌசலன் (வயது 24) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவர்.

(120)


## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி, பிளைவூட் வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்களும், பழகவிரும்பும் விற்பனையாளர்களும் தேவை.

**த.குமாரசாமி அன் சன்ஸ்**
248/1,கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம். (327)


## புலிகளுக்கு ஆதரவான வானொலிக்கு கனடா ஆணைக்குழு அங்கீகாரம்!

கனடாவில் புலிகளுக்கு ஆதரவான எப்.எம் வானொலி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு, கனடிய வானொலி, தொலைக்காட்சி ஒலிபரப்பு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உலகத் தமிழர் இயக்கம் இந்த வானொலிச் சேவையை நடத்துவதற்கு விண்ணப்பம் செய்திருந்தது. கனடிய பல்பண்பாட்டு வானொலி அலைவரிசை ஊடாகவே இந்த ஒலிபரப்பு இடம்பெறவுள்ளது.

கனடிய பல்பண்பாட்டு வானொலி சேவையில், 16 பண்பாட்டுக்குழுக்கள் 22 மொழிகளில் சேவைகள் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## கூடிய நேரத்தை தொலைக்காட்சியுடன் செலவிடும் இலங்கைச் சிறார்கள்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் செலவிடும் நேரத்தைவிட, தொலைக்காட்சியுடனேயே அதிக நேரத்தைச் செலவிடுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.

இந்த ஆய்விலிருந்து 93 சதவீதமான சிறுவர்கள் நாளொன்றுக்கு மூன்று மணிநேரத்தைத் தொலைக்காட்சியுடன் செலவிடுவது தெரியவந்துள்ளது. இலங்கைச் சிறுவர்கள் வருடத்தில் 1095 மணித்தியாலங்கள் தொலைக்காட்சியில் செலவிடுவதாகவும் தெரியவருகிறது.

சிறுவர்களின் இந்த நிலை குறித்து ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
**அரசு**
(குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்)
10.30, 2.30, 6.30,9.30
(சி-732)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ஞாயிறுவரை - விஜய், ஸ்நேகா நடித்த
**வசீகரா**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே)
**CROUCHING TIGER HIDDEN DRAGON**
(சி-731)

**சிறு விளம்பரம்**

**விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேட் பெண்நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (அத்தியடி சந்திக்கு அருகில்)

(328)


## இன்றைய நாள் இனிய நாள்

**27-04-2003 - ஞாயிற்றுக்கிழமை**

**மேடம்** :- பூமி, வாகனம் நன்மை, புதிய ஸ்தானம், களஸ்திர சுகம், தூக்க குறைவு.

**இடபம்** :- சிநேகிதரால் கவலை, கௌரவக்குறைவு, தேகசுகக் குறைவு, பிரயாசை மிகுதி, வாகனலாபம்.

**மிதுனம்** :- நேத்திரரோகம், ஏமாற்றம், அதிககவலை, தொழில் விருத்தி, பணப்பற்றாக்குறை.

**கர்க்கடகம்** :- சந்தோஷ மிகுதி, சரீர ஆரோக்கியம், சிநேகலாபம், தனதானிய லாபம்.

**சிங்கம்** :- தாரசுகத் தடை, ரோகம், சோம்பல், தொழில்குறைவு, அதிக செலவு.

**கன்னி** :- புத்திர பந்துக்களால் கவலை, தேக ஆரோக்கியம் பாதிக்கப்படல், இனசன விரோதம்.

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

**துலாம்** :- சத்துரு வெற்றி, காரிய சித்தி, தொழில் விருத்தி, அதிக பிரயாசை, பிரயாணம்.

**விருச்சிகம்** :- பெரியோர் மதிப்பு, காரியனுகூலம், தேக ஆரோக்கியம், தொழில் சிறப்பு.

**தனு** :- தார புத்திரருக்கு ரோகபீடை, விஷபயம், சோம்பல் மிகுதி, திருடர்பயம்.

**மகரம்** :- பொதுசன மதிப்பு, காரிய வெற்றி, புத்திர களஸ்திர மகிழ்ச்சி, குடும்பச்சிறப்பு.

**கும்பம்** :- தாழ்ந்த நிலை, பிரயாணக் கஷ்டம், இனசன விரோதம், தேககசுகக் குறைவு.

**மீனம்** :- சந்தோஷ மிகுதி, புதிய ஸ்தானம், வாகன நன்மை, வாக்கு வசீகரம்.


# மக்கள் வங்கி

## அறிவித்தல்

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையிலும், சங்கானைக் கிளையிலும் 31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையினில்-

# பகிரங்க ஏல விற்பனை

## செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை | 10.05.2003 லிருந்து 12.05.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| சங்கானை | 13.05.2003 லிருந்து 17.05.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி.

(சி -875)

# அமைச்சர் ஜெயலத் கிளிநொச்சி விஜயம்

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன, நேற்றுமுன்தினம் வன்னிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளைப் பார்வையிட்டார்.

நேற்றுமுன்தினம் வன்னிப் பகுதிக்குச் சென்ற அமைச்சர் - தமிழீழ சுகாதார சேவையினரைச் சந்தித்ததுடன், சுகாதாரச் சங்கப் பிரதிநிதியிடம் 1200 மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். இம்மூக்குக்கண்ணாடிகள் நேற்று கனகபுரம் பாடசாலையில் வைத்து பொதுமக்களுக்குச் சுகாதார சேவையினரால் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகத்தைச் சந்தித்து அப் பகுதி நிலவரங்கள் தொடர்பாகவும் அமைச்சர் கலந்துரையாடினார்.

# வீதித்தடைகளை அமைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிடவில்லை

## ஜனாதிபதி செயலகத்திலிருந்து அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வீதித்தடைகளையும், சோதனைச் சாவடிகளையும் மீள அமைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் எனப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறானவை என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகுவதாக அறிவித்ததும், முப்படைத் தளபதிகளை அழைத்து ஜனாதிபதியே பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய்ந்திருந்தார். அதுவரை பொறுப்பு வாய்ந்த எவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாட்டின் தலைவர் என்ற வகையில் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்குள்ளது. அப்படியிருக்க அரசியல் ஆதாயம் தேடும் நோக்குடன் ஊடகங்கள் வீதித்தடைகளையும், வீதிசோதனைகளையும் மீளமைக்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இடைக்காடு மகா வித்தியாலயத்தின் பவள விழாவின்போது பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேராசிரியர் சிவாஞானசுந்தரம் (நந்தி) உரையாற்றுவதையும், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.வரதராசா, இலங்கை மின்சாரசபை பிரதி முகாமையாளர் முத்துரட்ணானந்தம், கல்லூரி அதிபர் வீ.எஸ்.சித்திரவடிவேலு ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

# பாலாவுக்கு இந்த வாரம் பதில் கடிதம் அனுப்பப்படும்

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திற்கான பதில் இந்த வாரம் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

புலிகளின் கடிதம் தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து, இந்த வார முற்பகுதியில் பதில் அனுப்பிவைக்கப்படும்.

வொஷிங்ரனிலிருந்து உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்தை இடம்மாற்றியிருந்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது என்ற கருத்தை அமைச்சர் பீரிஸ் நிராகரித்தார்.

புலிகளை- சர்வதேச சமூகம் இன்னமும் சட்டரீதியான அமைப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதே வேளை, அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஒதுக்கும் நோக்குடன் நடந்துகொள்ளவில்லை. மீண்டும் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை -

நோர்வே அதிகாரிகள் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்புகளைப் பேணி வருவதாகத் தெரியவருகிறது.

# மன்னாரில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர் விடுதலை!

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த 26 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தலைமன்னார் மற்றும் பேசாலைக் கடற்பரப்பில் கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி உள்ளூர் மீனவர்களால் - இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டனர். தடுத்துவைக்கப்பட்ட 26 இந்திய மீனவர்களையும், அவர்களது 27 இழுவைப்படகுகளை விடுவிக்கவேண்டுமென்று சட்டமா அதிபர் அலுவலகம் ஆலோசனை வழங்கியிருந்தது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றில் இந்த 26 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

# போர்நிறுத்த கண்காணிப்புக்குழு மீது எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கையில்லை!

## இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டன

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தைக் கண்காணித்துவரும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று எதிர்க்கட்சிகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு- விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பை அரசாங்கம் தனியான கடற்படையாக அங்கீகரிக்க வேண்டும் எனச் சிபார்சு செய்திருந்தது.

இந்த விவாகாரம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்தது தொடர்பாகவும் ஆராய ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சிகளின் குழுவொன்றை நியமித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி., தேசிய ஐக்கிய முன்னணி ஆகியன அங்கம் வகிக்கின்றன.

இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே- கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் நம்பிக்கை இல்லையென்றும் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இந்தியா உட்பட இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளே இடம் பெறவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன.

கடற்புலிகளைத் தனியான கடற்படையாக அங்கீகரிக்கவேண்டும் என்ற கண்காணிப்புக் குழுவின் யோசனைகளையும் எதிர்க்கட்சிகளின் குழு நிராகரித்துள்ளது.

### கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் சந்திக்க இருந்தும், இந்தச் சந்திப்பு திடீரென பின்போடப்பட்டது.

தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களை தாம் சந்திக்க விரும்புவதாக ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் செயலாளர் - ஜனாதிபதியின் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொள்ளப் போவதில்லை எனக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

### பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

சங்கானை பிரதேச செயலகத்தில் கணினி, மரவேலை ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புகின்ற இளைஞர், யுவதிகள் தத்தமது கிராம அலுவலர்களிடம் மேலதிக விபரங்களைப் பெற்று, கிராம அலுவலரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (118)

# புதிதாக ஏற்பட்ட அரசியல் நிலை; புலிகளுடன் கூட்டணி ஆராயும்!

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்ததன் பின்னர், எழுந்துள்ள புதிய அரசியற் சூழ்நிலை குறித்து ஆராயத் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னிக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் அறிவிப்பின் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியற் சூழ்நிலை பற்றி விடுதலைப் புலிகளின் அரசியறதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன். கலந்துரையாடுவதற்கே கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

மிகவிரைவில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சந்திப்பின்போது எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்தும் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - புலிகளுடன் ஆலோசிக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# மட்டு. பஸ்நிலையப் பகுதியில் இராணுவ விசாரணை தீவிரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஈஸ்ரன் பஸ்தரிப்பு நிலையம் மற்றும் தனியார் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவப் புலனாய்வுப் படையினர்- நாளாந்த அலுவலகங்களுக்கும், தொழில் நிலையங்களுக்கும் வீதியால் செல்லும் இளைஞர்களை விசாரணை செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்யும் இளைஞர்களிடம்- ஊர், பெயர், முகவரி ஆகியவற்றைக் கேட்டுக் குறிப்புப் புத்தகத்தில் எழுதுவதால் பொதுமக்கள் அச்சமும், பீதியுமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

# வரதராஜப்பெருமாள் இடம் மாற்றப்பட்டார்!

(கொழும்பு)

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணியின் தலைவரும், வட-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான வரதராஜப்பெருமாள் இந்தியாவில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தங்கியிருக்கும் இடத்திலிருந்து, மற்றுமொரு இரகசிய இடமொன்றுக்கு இந்திய அரசால் இடம் மாற்றப்பட்டிருக்கிறார்.

அஜ்மீர் பகுதியில் டர்கா நகரில் கடந்த பத்தாண்டு காலமாக வசித்து வந்த' அவருக்கு - முழுமையான பாதுகாப்பு, வீட்டு வசதி, தேவையான பணவுதவிகள் யாவும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

### கிபிர் விமானங்களின் வெடிப்பொலியால் பதற்றம்

இரத்மலானைப் பகுதியில் நேற்று முன்தினம் கிபிர் விமானங்கள் கிளம்பியபோது ஏற்பட்ட பெரும் வெடிப்புச் சத்தங்களால் கொழும்பில் பதற்ற நிலை ஏற்பட்டது. எனினும், இந்த வெடிப்பொலிகள் கிபிர் விமானங்கள் தமது வேகத்தை அதிகரித்தபோது, ஏற்படுத்திய காற்றழுத்தத்தினால் ஏற்பட்டன என்பது பின்னர் தெரியவந்தது. (01)

# பேச்சுக்களை மீள ஆரம்பிக்குமாறு கொழும்பு வந்த ஹக்கீம் கோரிக்கை

மூதூர், தோப்பூர் பிரதேசங்களில் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து அங்கு தங்கியிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், நேற்றுமுன்தினம் கொழும்பு திரும்பினார். இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசும், விடுதலைப் புலிகளும் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளாார்.

# ஈ.பி.டி.பி. ஒப்படைத்த ஆயுதங்கள்; விபரங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குக!

## நிமலராஜன் கொலை வழக்கில் நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலை வழக்கு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

இவ்விசாரணையின்போது இறந்தவர் சார்பில் சட்டத்தரணி றெமிடியசும், சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி வெற்றிவேலும் மன்றில் ஆஜரானார்கள்.

இதன்போது, சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வெற்றிவேல் - இறந்தவரை கொலை செய்தது ஈ.பி.டி.பி. அல்ல. இருந்தபோதும், ஈ.பி.டி.பி.தான் கொலைசெய்தது எனக் கூறுவது மனித உரிமைமீறலாகும். அத்துடன், தனிப்பட்ட நபர் ஒருவரின் செயற்பாட்டைக் கட்சியுடன் சேர்க்க முடியாது எனவும், இவ்வழக்கு முடிந்தவுடன் தாம் இதற்காக மானநஷ்ட ஈடு கோரவேண்டிவரும் எனவும் எச்சரித்தார்.

இதற்கு நீதிவான் - நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் இடம்பெறும் திறந்த வழக்கினைப் பத்திரிகைகள் பிரசுரிப்பதற்கு உரிமையுண்டு. இதை தடுப்பதற்கு நீதிமன்றத்திற்கு அங்கீகாரம் இல்லை. எனினும், செய்திகள் மூலம் தனிப்பட்ட நலன் பாதிக்கப்படுமாயின் அது குறித்து மன்றில் எழுதது மூலம் விண்ணப்பம் செய்யலாம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பு குற்றவியல் பொறுப்பதிகாரி பி.எச்.டி.ரஞ்சித் டீ சில்வாவை மன்றின் முன்னைய கட்டளைக்கு அமைவாக எழுத்து மூலமான அறிக்கையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் ஈ.பி.டி.பி - இராணுவத்தலைமையகத்திடம் கையளித்த ஆயுதங்கள் தொடர்பான விபரங்களையும், யாரிடம் ஆயுதங்கள் கையளிக்கப்பட்டன என்ற விபரத்தினையும் அறிக்கையாக அடுத்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவான் விக்னராஜா உத்தரவிட்டார். இவ்வழக்கின் சந்தேக நபர்களை அடுத்தமாதம் 9 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதிவான் கட்டளையிட்டார். (லி)

# கொடிகாமத்தில் தனியான பிரதேச செயலர் பிரிவு!

இந்த ஆண்டின் இறுதிக்குள் கொடிகாமத்தில் தனியான பிரதேச செயலர் பிரிவு அமைக்கப்படவுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசம் 60 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டிருப்பதால், பிரதேச செயலகத்தின் பணிகளை இலகுபடுத்துவதற்காகவும், மக்களின் சிரமங்களைக் குறைக்கும் முகமாகவும் இந்நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிகிச்சைக்கு வந்த வன்னிவாசி மரணம்

மல்லாவி வைத்தியசாலையிலிருந்து காய்ச்சலுக்கான மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட செல்லையா சபாபதி (65) என்ற வயோதிபர் வரும்வழியிலேயே மரணமாகியுள்ளார்.

இவர் கொல்லவிளான்குளம் - வவுனிக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (120)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோவில் வீதியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் பின்வரும் நபர்களைத் தொடர்புகொள்ளுமாறு அச்சங்கம் கோரியுள்ளது.

கோவில் வீதி நல்லூரைச் சேர்ந்த ரவிபாலசந்திரன் சரோஜினி, சுழிபுரம் மேற்கு - செல்லையா கந்தையா, கோண்டாவில் மேற்கு - முத்தையா கிருஷ்ணன், அரியாலையைச் சேர்ந்த பூமணி சித்திரவேல், மணியந்தோட்டத்தைச் சேர்ந்த சந்திரதாஸ் சிவராணி, அரியாலை - தம்பி சுப்பிரமணியம் ஆகியோரே தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## நூல்கள் அன்பளிப்பு

சுன்னாகம் - ஸ்கந்தவரோதயா கல்லூரி நூலகத்திற்கு ஒருதொகுதி நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. மேற்படி கல்லூரியில் முன்னர் பணியாற்றிய ஆசிரியர் ஒருவரின் நினைவாகவே 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. (118)

# மாநகரசபை எல்லைக்குள் நாய்களுக்குத் தடுப்பூசி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி போடும் பணி யாழ்.மாநகரசபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மூன்றாம் கட்டமாக நாய்களுக்குத் தடுப்பூசிபோடும் பணி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்திலும், மே மாதம் 6 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை பத்திர காளி கோவில் வள்ளுவர் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை ஓட்டுமடம் கலைமகள் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

அதேவேளை, மே மாதம் 7 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மதியம் 12.30 மணிவரை ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்திலும், மாலை நாவலர் வீதி கீரிப்பிள்ளையார் மகப்பேற்று நிலையத்திலும் நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படும்.

அதேவேளை, நாய் ஒன்றிற்கு ரூ.10.50 சதம் செலுத்தி இந்த ஆண்டிற்கான உரிமத்தினையும் பெற்றுக் கொள்ளும்படி யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸ் கேட்டுள்ளார். (ரா)

# நெல்லியடிப் பயிற்சிப் பாசறையில் 156 சாரணர்கள் பங்குபற்றினர்!

(நவிண்டில்)

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் ஆ.ஜெகநாதனின் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட சாரணர்களுக்கான பயிற்சிப் பாசறை நிகழ்வில் 156 சாரணர்கள் பங்குபற்றினர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியைப் பிராந்திய சாரணர் பயிற்சி உதவிப்பணிப்பாளர் கோ.செல்வவிநாயகம் வழிநடத்தினார். மாவட்ட உதவி ஆணையாளர்கள் கோ.குழந்தைவேல், சிறீநடராசா, சாரண ஆசிரியர்கள் பல்வேறு குழுக்களாக இயங்கிச் சாரணப் பயிற்சிகளை வழங்கினர்.

ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், அத்தியார் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைச் சாரணர்கள் பங்குகொண்ட இந்த நிகழ்விற்கு யாழ்.பிரதி மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி. மகாலிங்கம், மாகாண உதவிக்கல்விப்பணிப்பாளர் அனந்தராஜ், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பாசறையில் சாரணர்களின் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டனர்.

பயிற்சியில் பங்குகொண்ட சாரணர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதாகப் பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் ஆ.ஜெகநாதன் தெரிவித்தார். (116)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

புங்குடுதீவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு, எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 10 மணிக்கு வடஇலங்கை சர்வோதய சேவை வளாக மண்டபத்தில் வைத்து பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

## வணிகர் கழகம் மறுப்பு

யாழ்.நவீன சந்தைக் கடைகளின் முன்னால் காட்சிக்காக வைக்கப்பட்ட புடைவைகளை மாநகரசபை ஊழியர்கள் அகற்றவில்லை எனவும், மாநகரசபை ஊழியர்களுக்கும், கடை ஊழியர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்படவில்லையெனவும் யாழ்.வணிகர் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

# கூக்குரலிட்டு வந்த கோஷ்டி படையினரால் தாக்கப்பட்டது

தாவடியிலிருந்து இணுவிலை நோக்கிக் கூக்குரலிட்டுக் கொண்டு சென்ற இளைஞர் குழுவொன்றைப் படையினர் வழிமறித்துத் தாக்கினர்.

தாவடியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குள் இருந்து வந்த இராணுவத்தினர் - அவர்களை வழிமறித்து அவர்களில் சிலரைத் தாக்கி, பின்னர் எச்சரிக்கை செய்து அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (82)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் :ஜெ.கஜவதனன்
முகவரி : வசந்தமாளிகை, வதிரி, கரவெட்டி.

பத்தாவது அகவையில்



பெயர் :கி.திவ்யன்
முகவரி : வளர்மதி வீதி, கைதடி மத்தி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்



**பொன்னாலை காரைநகர் பிரதான வீதி ஓரமாக கடற்பகுதியில் மரமின் கம்பங்கள் நிறுத்துவதற்கான**

**கூறுவிலை கோரல்**

**கூறுவிலை இல. DGM/NP/2003/15**

**மேற்படி வேலைக்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை மின்சார சபை வடமாகாண கேள்விச்சபையால் கோரப்படுகின்றது.**

**வேலை விபரம்**

**பொன்னாலை காரைநகர் பிரதான வீதியின் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த 11 KV மின் மார்க்கத்தை மீண்டும் புனரமைப்பதற்கு தேவையான இரட்டை மர மின் கம்பங்களை 44 இடங்களில் நாட்டுதலும் கொன்கிரீட் இடுதலும்.**

**மேற்படி கூறுவிலைகளுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.250/- செலுத்தி எனது அலுவலகத்தில் 2003.04.28 ஆந் திகதி தொடக்கம் 2003.05.05 ஆந் திகதிவரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.**

**பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களின் மூலப்பிரதி வேறாகவும் இணைப்பிரதி வேறாகவும் கவரிடப்பட்டு, கவரின் இடது பக்கமேல் மூலையில் கூறுவிலையின் இலக்கம் குறிப்பிடப்பட்டு எனது அலுவலகத்திற்கு (பிரதி பொது முகாமையாளர் அலுவலகம்) தபால் மூலமாகவோ நேரடியாகவோ 2003.05.06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கே திறக்கப்படும்.**

**தாமதமாகவும், எம்மால் வழங்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.**

**பிரதி பொது முகாமையாளர்**
**அலுவலகம்**
**இலங்கை மின்சார சபை,**
**536/1, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தலைவர்**
**வடமாகாண மின்சார சபை,**
**கோள்வி கோரல்**

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை"

# விளையாட்டு அரங்கம்

# என்றென்றும் ரசிகர்களுக்கு ஏமாற்றமா?

1998 சியோல் ஒலிம்பிக் போட்டிகளில் 100M ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் கனடாவின் பென் ஜோன்சன். ஆனால், ஊக்க மருந்து உபயோகித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் தங்கம் வென்று ஒரு சில மணிநேரத்தில் தங்கப் பதக்கம் அவரிடமிருந்து மீளப்பெறப் பட்டது. அதன்பின் அந்த நிகழ்வில் இரண் டாவதாக வந்த கார்ல் லூயிஸுக்கு அந் தப் பதக்கம் வழங்கப்பட்டது. இது பழைய வரலாறு. கார்ல் லூயிஸ் ஐக்கிய அமெரிக்க தடகள வரலாற்றில் என்றும் மறக்கப்பட முடியாதபடி தங்கப் பதக் கங்கள் குவித்தவர். இப்பொழுது மீண்டும் பழைய வரலாறு திரும்பவும் பார்க்கப்படு கிறது. அதாவது, 1988 இன் சியோல் ஒலிம்பிக்போட்டிகளில் கலந்துகொண்ட பத் தொன்பது வீரர்கள் ஊக்கமருந்து பாவித் ததாக உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் மூவர் தங்கம் வென்றவர்கள். அதில் ஒருவர் கார்ல் லூயிஸ். ஆனால், இவர்கள் வேண்டு மென்றே, தெரிந்துகொண்டு தடைசெய் யப்பட்ட மருந்துகளை உட்கொள்ளவில்லை என்ற வகையில் அவர்கள் மீது குற்றம் காண இயலவில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாக வும், அதன் பின் ஒலிம்பிக்கில் பங்குகொண்ட தாகவும் தற்போது கூறப்படுகின்றது. இந்த



கார்ல் லூயிஸ்

விடயங்கள் ஏறத்தாழ பதினைந்து வருடங் களின் பின் முன்னிலைப்படுத்தப்படக் கார ணம் பலவாறு ஊகிக்கப்படுகின்றது. மேலும் இது வெறும் புரளிச்செய்தி என்பதே பெரும் பாலானவர்களின் கருத்தாக இருக்கிறது. இருநதாலும், GREAT ATHLETE கார்ல் லூயி ஸின் பெயர் இதில் பயன்படுத்தப்பட்டமை மிகவும் சங்கடமானதாக ரசிகர்கள் உணர் வார்கள். இங்கு உண்மையான பிரச்சினை என்னவெனில் - தடகள வீரர்களுக்கு எது நல்லது, எது கூடாது என்பதைச் சம்பந்தப் பட்டோர் தெளிவாக வரையறை செய்ய வேண்டும். சிலவற்றைப் பற்றிக் கேட்டால் - அது லிஸ்டில் இல்லை. ஆனால், எதற் கும் கவனமாக இருங்கள் என்கிறார் இங்கி லாந்தின் நட்டாஷா டென்வர். இதுபற்றி அநேகமாக எல்லா விளையாட்டு வீரர் களுமே பரிதாபகரமான நிலையில் இருக் கிறார்கள். அதிலும் தடகள வீரர்களின் பாடு பெரிதும் பரிதாபத்துக்குரியது. 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் இவர் களை இன்னும் என்ன பாடுபடுத்தப் போகிறதோ.

- சுதர்ஸன் -

# பாகப்பிரிவினை TEST ONE DAY

ஒருகாலத்தில் தம்முடைய சொந்த மைதானத்தில் வருகின்ற அணிகளை எல்லாம் ஒரு வழிபண்ணி, டெஸ்ட் என்றால் என்ன? ஒருநாள் போட்டி என்றால் என்ன? தாமே ராஜாக்கள் என்று கூறிவந்த இலங்கையணி, இன்று மாலுமி இல்லாத கப்பல் போன்று தவிக்கின்றது. ஒருநாள் போட்டிகளுக்கு ஒரு தலைவர், டெஸ்ட் போட்டிகளுக்கு ஒருதலைவர் என்று அவுஸ்திரேலியா தங்களுடைய கிரிக்கெட் அணியைப் பலப்படுத்தியபோது, அதனை ஒரு நகைப்பாகப் பார்த்தவர்கள்- இப்போது தாமும் அந்த வழியைப் பின்பற்றி இரண்டு அணியைத் தெரிவுசெய்தி ருக்கின்றார்கள். இரண்டு தலைவர்க ளைத் தெரிவுசெய்திருக்கின்றார்கள். இது ஓரளவு வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், இதனைக் காலங்கடந்த ஞானம் என்றே கூறவேண்டும். ஒரு நாள் அணிக்கு மார்வன் அத்தப்பத்து அணித்தலைவராகத் தெரிவுசெய் யப்பட்டது ஏன் என்பது தெரிய வில்லை. ஆனால், திலகரட்ண - டெஸ்ட் அணியின் Captain என்பது இலங்கைக்குக் கிடைத்த சிறந்த தலைவர். ஆனால், அவரை ஒருநாள் போட்டிகளில் வைத்து எப்படிப் பழி வாங்குவார்களோ என்று யோசித்த போது, அவரின் திடீர் அறிவிப்பு ஒரு நாள் போட்டிகளில் இருந்து வில குவதாக. இது என்ன கிட்டிப்புல்லும் கிளித்தட்டுமா?. முன்னாள் இலங்கை அணிவீரரும், தற்போதைய தேர்வுக் குழு உறுப்பினருமாகிய கனவான் அரவிந்த டி சில்வா - இலங்கை அணியினை நன்கு நெறிப்படுத்துகின் றார். நல்ல விடயம். இதேவேளை, முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியா வின் கிரிக்கெட் அஸ்தமனம் ஆரம் பிக்கத் தொடங்கிவிட்டதா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகிறது. அதன் முதலாவது அம்சமாக - அவரை ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் மத்தியதர ஆட்டக்காரராக இருக்கும்படி தேர்வுக்குழு பணித்திருக்கின்றமை ஒரு சிறந்த உதாரணமாகும்.




டெஸ்ட் தலைவர் அத்தப்பத்து மகிழ்ச்சி நீடிக்குமா?

## இலங்கை டெஸ்ட் அணி




மார்வன் அத்தப்பத்து
சனத் ஜெயசூரிய
குமார் சங்கக்காரா
மஹேலா ஜயவர்த்தன
ஹசான் திலகரட்ண
றொமேஸ் கலுவிதாரண
குமார் தர்மசேன
சமிந்தவாஸ்
முத்தையா முரளீதரன்
கௌசல்ய லொக்கு ஆராச்சி
பிரபாத் நிஸ்ஸங்க
மைக்கல் வன்டோர்ட்
திலகரட்ண டில்சான்
உபுல் சந்தன
தர்ஷன கமகே.

இந்த அணியிலே பெருவாரியான சுழல்பந்துவீச்சாளர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த அணியின் தற்போதைய தற்காலிய பயிற்றுநராக டுலிப் மெண்டிஸ் பொறுப் பேற்றிருக்கின்றார். இவருடை Coaching இலங்கை வீரர்களிடம் எடுபடுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அணியை விட்டுப் பல வருடங்களாக விலக்கி வைக்கப்பட்டிருந்த வீரர்கள் பலர் அணிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், நன்கு ஆடிய ரஸல் ஆர்னல்ட்டின் நீக்கம் இலங்கை அணியைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய வெற்றிடம்.

WILL HE PLAY NEXT TEXT MATCH ?

பி.என்.சுதர்சன்

# இது அக்கரைப் பச்சையல்ல

கடந்த வருடம் அமெரிக்காவின் ரிம் மொண்ட்கொமரி 9.78 செக்கனில் 100 மீற்றர் ஓட்டத்தைப் பூர்த்திசெய்து, உலக சாதனை படைத்தபோது உலக தடகள ரசிகர்களின் நினைவுக்கு உடனடியாக நினைவுக்கு வந்தவர் அமெரிக்காவின் மொறிஸ் கிறீன். ஏனெனில், அண்மைக்காலத் தடகளப்போட்டிகளில் தொடர் வெற்றிகள் மற்றும் 1999 இல் 100 மீற்றர் (9.79 செக்கன்கள்) ஓட்டத்துக்கான சாதனை வீரன் என்ற பெயரைத தக்கவைத்திருந்தவர். இந்நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக அமைதியாக இருந்த மொறீஸ் கிறீன், தற்போது வீச்சாக வெளிவந்துள்ளார். 2004 ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னர் நடைபெறவிருக்கும் தடகளப்போட்டிகளில் உலகின் சிறந்த தடகள வீரர்களைக் கண்டு கொள்ளமுடியும். அந்த வகையில், மௌண்ட்சென் அந்தோனியே ரிலே யில் 200 மீற்றர் தூரத்தை ஓடி முடித்த நேரம் 20.16 செக்கன்கள். இப்பொழுதுதான் தீர்த்துக்கொள்ள வேண்டிய கணக்குப் பற்றிப் பேசு கிறார் மொறிஸ் கிறீன். ஓகஸ்ட் மாதத்தில் பாரிஸ் நகரில் நடைபெற விருக்கும் தடகளப் போட்டிகள் (WORLD CHAMPIONSHIPS) இவருக்கு முக்கியமானதாக இருக் கப்போகிறது. அந்தப் போட்டிகளில் 100M, 200M இரண்டிலும் தங்கம் வெல்வேன் என்கிறார் கிறீன். உல கின் அதிவேக மனிதன் நானே. என்னை மற்றவர்கள் முந்திவிட முடியாது என்கிறார் அவர். மொண்ட் கொமரியிடம் சாதனையைவிட்டுவிட முடியாது. WORLD CHAMPIONSHIPS இல் தங்கம் வெல்வது பெரும் கனவு. அது என்னாலேயே முடியும் என்கி றார் மொறிஸ் கிறீன்.









இனியடுத்து, கிறீன் பங்குகொள் ளப்போகும் நிகழ்வு, ஏப்ரல் 26 இல் மார்டினிக்கில் நடைபெறும் போட்டி கள். இதில் 200 மீற்றரில் வெல்வேன் என் கிறார் (போட்டி முடிவடைந் திருக்கும்). அடுத்தது ஜூன் முதலாம் திகதி லொஸ் ஏஞ்ஜலிஸ் நகரில் நடைபெறவிருக்கும் போட்டிகளில், தான் கலந்து கொள்ளவிருக்கும் 100M ஓட் டம். இவை இரண்டிலும் தங்கம் வென்று, தன்னைத் திடப்படுத் திக் கொண்டு, ஓகஸ்டில் பாரிஸ் தடகளப் போட்டிகளில் தங் கங்கள் வென்று, அதனை உறு திப்படுத்தி, ஏதென்ஸில் 2004 நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் தன் திறமையை மீண்டும் உறுதிப்படுத்துவதே மொறிஸ் கிறீனின் இலட்சியமாக இருக்கக்கூடும். ஏனெனில், இவரே 100M சாம்பியன். மேலும் மூன்று முறை உலகச் சாம்பியன் பட்டம் வென்றவர். அதோடு, நிறைந்த அனுபவம் வாய்ந்தவர். இன்று தொடக்கமே கிறீனா?, மொன்ட் கொமரியா? என்ற வினாவுக்குத் தொடர்பதில் கிடைக்க ஆரம்பித்துவிடும்.





- சுகன்யா-

# கண்ணுபட போகுதையா

இலங்கை - நியூசிலாந்து டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவி, அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தலைப்பாகையைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பதைப் பற்றி மந்திராலோசனை செய்துகொண்டிருக்கிறது.

யாராலும் கடிவாளம் போடமுடியாத அவுஸ்திரேலியர்கள் வெறும் நான்கு விக்கெட் மட்டும் இழந்து, 576 ஓட்டங்களைக்



என் கண்ணே பட்டிரும் போல இருக்கப்பா....

குவிக்க, ரிக்கி பொண்டிங் 206, டரன் லீமன் 160, கில்கிறிஸ் 101 என்று பட்டியலிட்டால் இதில் யாரும் ஆச்சரியமாகப் பார்க்கமாட்டார்கள். ஆச்சரியம் என்னவென்றால், சளைக்காமல் போராடிய லாராவின் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தாவது 408 ஓட்டங்கள் எடுத்ததுதான். இதில் டரன் கங்காவின் பங்கு 117. லாரா 91, சாமுவேல்ஸ் 68.

எனவே FOLLOW ON கண்டத்திலிருந்து தப்பிய மேற்கிந்தியா- அவுஸ்திரேலியாவுக்குப் பந்துவீச ஆரம்பித்தது. இறுதி விளைவு 3 விக்கெட் இழப்பிற்கு, அவுஸ்திரேலியா 238 எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் மத்தியூ ஹேடன் 100 (அப்பாடா கனகாலத்துக்குப் பிறகு). லீமன் 66. எனவே, 127 ஓவர்களில் 407 ரன்கள் எடுத்தால் வெற்றி என்றநிலையில், இந்த ஆட்டத்தின் கடைசி இன்னிங்ஸ் ஆரம்பிக்கிறது.

எல்லாம் நன்றாகத்தான் இருந்தது, அன்டி பிக்கல் பந்தைக் கையில் எடுக்கும்வரை. அப்போது நிலைமை மேற்கிந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 210. அதனை அன்டி பிக்கல் 6 விக்கெட்டுகளுக்கு 228 ஆக்கி விட்டார். அவர் வீழ்த்திய கிடாய்கள் - சர்வான், சாமுவெல்ஸ், டேவிட் பர்னாட்- அதோடு முடிவு தெரிந்தது. மொத்தம் மேற்கிந்திய அணி எடுத்தது 288, தோற்றது 118 ஓட்டங்களால். ஆட்டத்தின் நாயகன் இரட்டைச் சதம் போட்ட ரிக்கி பொண்டிங். அதேவேளை, பாராட்டப்படவேண்டியவர் பிறைன் லாரா. அற்புதமான செஞ்சரியுடன், கரிபியனில் கூடிய ஓட்டங்களான 4124 எடுத்தவராகிறார் லாரா. இதற்கு முன் காரி சோபர்ஸ் 4075 ஓட்டங்கள் எடுத்திருந்தார். மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் மே 1 ஆம் திகதி பார்படோஸ் தீவின் பிறிட்ஜ்டவுண் நகரில் நடைபெறவிருக்கிறது. அங்கு கிளென் மக்ரா அணியுடன் இணைகிறார். பந்துவீச்சுப் பலமடைகிறது என்பது மேற்கிந்



என்ன ஸ்மாட்...!

தியாவின் பிரச்சினை. பந்துவீச்சாளர்களில் யாரை நீக்குவதென்பது அவுஸ்திரேலியாவின் பிரச்சினை. ஆனால், மூன்றாவது டெஸ்டின் முடிவு என்னவென்பது ஒரு பிரச்சினையும் அல்ல.

- நிம்மி

# நீங்க நிறையவே செஞ்சீங்க

## THANKS

இலங்கைக் கிரிக்கெட்டைச் சர்வதேச தரத்துக்கு உயர உதவியவர் இலங்கையில் பிறந்து, அவுஸ்திரேலியாவில் குடியேறிய டேவ் வட்மோர். ஏறத்தாழ ஏழு வருடகாலங்கள் இரண்டு தடவைகளாகப் பயிற்றுநராக இருந்தது மட்டுமன்றி, 1996 இல் உலகக் கிண்ணக் கிரிகெட் வெற்றிக் கிண்ணத்தை இலங்கை வென்றெடுக்கக் காரணமாக இருந்தவரும் அவரே. அவர் தற்போது இலங்கை அணியின் பயிற்றுநர் பதவியிலிருந்து "நீக்கப்படுகிறார்" இதுபற்றி பெரிதாக வட்மோர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லையாயினும், ஒரு சோகம் இழையோடுவதை அறியமுடிகிறது. இலங்கை அணியுடன் தானிருந்த காலங்கள், ஏற்ற இறக்கங்கள், விமர்சனங்கள், விவாதங்கள், கசப்புகள், கவர்ச்சிகள் எல்லாவற்றைப் பற்றியும் மிகவும் நாகரிகமாக எடுத்துக்கூறியுள்ளார். மேலும் தனது ஒப்பந்த காலததை ஒரு மாதம் முன்தள்ளித் தன்னை விடுவிக்கும்படி கேட்டுக்கொண்ட அவர், இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில்தான் கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளராகச் செயற்பட விரும்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அது முடிந்ததும், அவர் ஏற்கப் போகும் புதிய பொறுப்பும் கிரிக்கெட் பயிற்றுநர் பதவிதான். அதாவது, பங்களாதேஷ் அணியின் கிரிக்கெட் பயிற்றுநராக இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் செல்லவிருக்கின்றார். டெஸ்ட் விளையாடும் அந்தஸ்துப் பெற்ற பங்களாதேஷ் கண்ட படுதோல்விகள் எண்ணிலடங்காதது. அதுபற்றி கிரிக்கெட் ரசிகர்கள் நன்கு அறி வார்கள். மேலும், பங்களாதேஷ் கிரிக்கெட் பற்றி ரசிகர்களுக்கு ஆர்வமும் இல்லை. ஏனெனில், அந்த அணி அடிமட்ட அணி. ஆனால், இப்போது பயிற்றுநராகச் செல்லப்போவது வட்மோர். அவரது ஆளுமை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மேலும் இவரது காலத்தில் பங்களாதேஷ் அணியில் மாற்றங்கள் நிச்சயம் தெரியத்தான் போகின்றன. அந்தச் சூட்சுமங்கள் நன்கு அறிந்தவர் வட்மோர். கிரிக்கெட் ரசிகர்கள்



வட்மோர் போய்வாங்கோ.........

வட்மோருக்கு விடைகொடுப்பதுடன், பங்களாதேஷ் நாட்டுக் கிரிக்கெட் அணிக்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ராஜ்குமார்

# இளமை ஊஞ்சலாடுகிறது

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சனை விரைவில் மறந்துவிடமுடியாது. இருந்தாலும், இடைநடுவில் அணியே திரும்பிப்போகவேண்டி ஏற்பட்டுவிட்டதால், தொடர்ந்து அன்டர்சனைச் சந்திக்க இயலவில்லை. இருந்தும் அன்டர்சன் தற்போது நம்பிக்கையுடன் பேசுகின்றார். இங்கிலாந்து அணியில் இளம் இரத்தங்களைப் புகுத்துவதன்மூலம் கிண்ணம் ஒரு சிலவருடங்களில் அவுஸ்திரேலிய அணியை மேவ இயலும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார் அவர்.



உன்னை அறிந்தால்,
நீ உன்னை அறிந்தால்...

இருபது வயது மட்டும் நிறைந்த இந்த லங்காஷயர் வீரர் - புடமிடப்படுவது அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் றொட்ணி மார்ஷ் மூலமாகும். ACADEMY இல் பயிற்சி பெறும் பல இளஞர்களை அவர் சுட்டிக் காட்டுகிறார். சர்ரே கவுண்டி சகலதுறைவீரர் றிக்கி கிளாக் ஒருவர், இன்னொருவர் நொட்டிங்ஹம் ஷயர். துடுப்பாட்ட வீரர் 24 வயதுடைய கிறீஸ் நீட். இன்னொருவர் லங்கா ஷயரின் கைல் ஹொக். இவர்களைவிட இருபதுகளின் ஆரம்பத்தில் இருக்கும் மைக்கல் வோண், மார்க்கஸ் டிரெய்ஸ்கொதிக், அன்ரு பிளிண்டோவ் போன்றவர்களையும் சுட்டிக்காட்டுகிறார் அன்டர்சன். இவர்கள் எல்லோரும் மிகத் திறமைவாய்ந்த இளைஞர்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் அன்டர்சன், அவுஸ்திரேலிய அணிவீரர்கள் அநேகமாக முப்பதுகளுக்குச் சற்று முன்பின்னால் இருப்பவர்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

இது ஒருபுறம் இருக்க, கென்யாவின் கொலின்ஸ் ஒபுயா - இங்கிலாந்தின் வோரிக் ஷயர் கவுண்டி அணியில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். எதிர்பார்த்த இரண்டு டெஸ்ட் ஆட்டக்காரர்கள் தம் இயலாமையைத் தெரிவிக்க அந்த இடத்துக்கு கென்யாவின் வீரர் தெரிவுசெய்யப்படுவது என்பது ஆச்சரியமானதே. ஆனால், உலகக் கிண்ணப் போட்டிகளில் கென்யாவின் சாதனைகள் பல மட்டங்களிலும் படிந்துள்ளன. அதில் ஒன்றுதான் வோரிக் ஷயர் கவுண்டியின் அழைப்பு. இவரது வயதும் 21 மட்டுமே. கொலின்ஸ் ஒபுயா தனது எதிர்காலத்துக்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்ள இது அவருக்கு நல்லதொரு சந்தர்ப்பம்.

-தீபன்-

# நல்ல மனம் வாழ்க நாடு போற்ற வாழ்க

இலங்கைக் கிரிக்கெட் வரலாற்றில் தாமாக முன்வந்து தலைமைப் பதவியைத் துறந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்றொரு வினாவை எழுப்புகிறார் கிரிக்கெட் விமர்சகர் ஒருவர். தொடர்ந்தும் அவரே பதில் கூறுகையில் - அப்படி ஒருவரைத் தன்னால் நினைவுபடுத்திக்கொள்ள இயலவில்லை என்கிறார். அப்படியாயின், அதிலும்கூட ஒரு நாகரிகப் பதிலை விட்டுச்செல்பவர் சனத் ஜெயசூரியாதான். சனத் ஜெயசூரிய 2003 தென்னாபிரிக்க உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் முடிந்த கையோடேயே தனது விலகல் கடிதத்தைக் கொடுத்திருந்தவர். ஆனால், சார்ஜா கிண்ணப்போட்டிகள் முடிவடையும்வரை தலைமைப்பதவியைத் தொடருமாறு கேட்கப்பட்டார். அதேபோல, சார்ஜாவிலிருந்து திரும்பியபின் தனது தலைமைப்பதவியை விட்டு விலகி விட்டார்.



ஆயிரத்தில் ஒருவனப்பா நீ...

வேறெந்த விளையாட்டையும்விட மிகுந்த அதிகாரம் கொண்டதொரு பதவி - கிரிக்கெட் அணித்தலைவர் பதவி. அதோடு, மிகுந்த கௌரவம் கொண்டதும்கூட. மேலும் தற்போது ICC அறிமுகப்படுத்தியுள்ள புதிய சட்டங்களின் கீழ் தலைவர் மேலும் பொறுப்பும், பெறுமதியும் பெற்றவர் ஆகிறார். இந்தநிலையில் தானாகச் சனத் தன் பதவியை விட்டுக்கொடுக்கிறார். "நீக்கப்பட்டாய் அல்லது நீக்கப்படபோகிறாய்" என்பதுதான் கிரிக்கெட் அணித்தலைவர் ஒருவரின் தலைவிதி. அதை மறுதலித்து "ஏன் நீங்கினாய்?" என்று எல்லோரும் கேட்கும் வண்ணம் சனத் நடந்துகொண்டுள்ளார். சனத்தின் பலம் மிகவும் அதிகம். உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கையை அரையிறுதி ஆட்டம்வரை கொண்டுவந்தவர். இலங்கைக்காகக் கணிசமான ரன்கள் சேர்த்துக் கொடுத்தவர். அதோடு அரசியல் பின்பலம் நிறையப்பெற்றவர். மேலும், இன்னமும் தலைமையைத் தொடர எல்லோராலும் விரும்பப்பட்டவர். முன்னைய நாள் நியூசிலாந்து அணித்தலைவரும், தற்போது இலங்கை வந்துள்ள நியூசிலாந்து அணி முகாமையாளருமாகிய ஜெவ்குறோ கருத்துக் கூறும்போது - சனத் அணித்தலைவராக இல்லாதது ஸ்ரீபன் பிளெமிங்குக்குப் பெரும் ஆறுதலைக் கொடுத்திருக்கும் என்கிறார். இலங்கையை விட்டு நீங்கும் டேவ் வட்மோர் - சனத்தை மிக உயர்வான நிலையில் கருத்துக் கூறியிருக்கிறார். இவை ஒரு சில மாதிரிகளே. சனத்தைப் பாராட்டாதவர்களே இல்லை. இனி சனத் தொடங்கப்போகும் தன் கிரிக்கெட் வாழ்க்கையின் மூன்றாவது கட்டம் - அணிவீரனாக, பின் அணித்தலைவராக, மீண்டும் அணிவீரனாக மூன்றாம் கட்டத்தில் நிற்கிறார். இப்பொழுது அவருக்குத் துடுப்பாட்டம் மட்டுமே முதற் சிந்தனையாக இருக்கமுடியும். மேலும் அவர் நேசித்த, அவரை நேசித்த அணிவீரர்கள் அப்படியே இருக்கிறார்கள். எனவே, சனத்தின் இந்தக் கட்டமும் அற்புதமான கட்டமாக அமையப்போவது என்பது உண்மை.

நர்மதா.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எதிரதாக் காக்கும் அறிவனார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தவறான பார்வையும் பிழையான கற்பிதங்களும்!

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் போராட்ட சக்தியாகவும், ஏகபிரதிநிதிகளாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது பற்றியும் - அமெரிக்கா இன்னமும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத வகையிலேயே தனது நிலைப்பாட்டைப் பேணிவருகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் பரப்புரைக்கிணங்கி - விடுதலைப் புலிகளைத் தமது நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்தது முதலாக - அமெரிக்கா, விடுதலைப் புலிகள் மீது கொண்ட பார்வையை இன்னமுந்தான் மாற்றவில்லை என்பது அண்மையில் அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் விடுத்த அறிக்கையிலிருந்தும் தெரியவருகிறது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் - ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் காட்டிவரும் மெத்தனப் போக்கை கண்டித்தும் - வொஷிங்ரன் மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படாததை ஆட்சேபித்தும் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக இடைவிலகுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்ததை -

அமெரிக்கா, தனது வழக்கமான பார்வையிலேயே நோக்கியதை ஆஷ்லி வில்ஸின் அறிக்கை எடுத்துக்காட்டியது.

குறிப்பாக - வொஷிங்ரன் மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படாமை - சமாதான முயற்சிகளிலும், விடுதலைப் புலிகளின் ஆர்வமிக்க பங்கேற்பிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அமெரிக்காவுக்கு ஒன்றும் தெரியாததல்ல.

இலங்கையின் போர் பாதித்த வட - கிழக்குப் பகுதிகளின் மீள்கட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இன்றிச் சாத்தியமானதல்ல என்பதும் அமெரிக்கா அறியாததல்ல.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலேயே விடுதலைப் புலிகளின் பங்களிப்பு மிக முக்கியமானதென சர்வதேச நாடுகளும், உதவி வழங்கும் நிறுவனங்களும் அங்கீகரித்து விட்டபோது - அவ்வாறானதொரு மாநாட்டிற்கு முன்னோடியான மாநாட்டிற்குப் புலிகளை அழைக்காமல் விடுவது எவ்வகையில் பொருத்தமானது என்பதும் அமெரிக்கா உணராததாக இருக்க முடியாது.

இவ்வாறான சூழலில் - வொஷிங்ரனில் முன்னோடி மாநாட்டை அமைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்படும்போது - விடுதலைப் புலிகளின் பங்களிப்பு அதில் இல்லாமற்போவது சாதாரணதொரு புறக்கணிப்பாக அலட்சியமாக இருந்து விட முடியாது என்பதை நன்றாகவே தெரிந்து கொண்டும் அமெரிக்கா செயலாற்றியதை - தன்மானமுள்ள எவரும் ஏற்றுக் கொண்டுவிடமாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் அழைக்கப்படாததற்கு - தாம் புலிகளைத் தடை செய்யப்படும் அமைப்புக்கள் பட்டியலில் சேர்க்கும்போது என்ன காரணங்கள் கூறியதோ, அதே காரணங்களை அமெரிக்கா தற்போது கூறமுற்படுவது - மிக வியப்பானதாகும்.

கடந்த ஓராண்டாக நடைமுறையிலுள்ள போர்நிறுத்தமும் - சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் ஆக்கபூர்வமான, அர்ப்பணிப்புடனான பங்களிப்பும் சர்வதேசத்தாலும் ஏன் அமெரிக்க ஜனாதிபதியாலும் கூட குறிப்பிடப்படுகையில் -

இன்னமும் பழைய பல்லவியைப் பாடுவதென்பது, அமெரிக்கா - விடுதலைப் புலிகளை எவ்வாறு நோக்குவது என்பது பற்றிய மாயையை இன்னமும் தன்வசம் வைத்திருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

இந்தநிலையில் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் அமெரிக்கா கொண்டிருக்கக்கூடிய சந்தேகங்களையும், தப்பபிப்பிராயங்களையும் நீக்கியிருப்பதுடன் - தமிழர் தரப்பினரின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் தமக்களிக்கப்பட்ட உறுதிமொழிகள் மீறப்படுமிடத்து அல்லது நிறைவேற்றப்படாதவிடத்து தமது அதிருப்தியை வெளிக்காட்டும் உரிமையைக் கொண்டிருப்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

அமெரிக்கா கருதுவது போல - சமாதானப் பேச்சுக்களை விட்டு முற்றாகப் புலிகள் வெளியேறிவிடவில்லை என்பதோடு - பேச்சுக்களில் அக்கறை செலுத்தும் அதேவேளை, பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை அமுல்செய்வதிலும் புலிகள் மிக அக்கறையாக இருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஆர்மிரேஜ்ஜும், ஆஷ்லி வில்ஸும் - தமிழர் பிரச்சினையின் தாற்பரியத்தை, விடுதலைப் புலிகள் ஆயுதமேந்த வேண்டியதன் நிர்ப்பந்தத்தை, புலிகளின் ஆயுதப் போராட்டம் மக்களின் போராட்டமாக வியாபித்திருப்பதை உணராது - அல்லது தெரிந்தும் வெளிக்காட்டிக்கொள்ளாது - அமெரிக்காவுக்கே பழகிப்போன - 'பயங்கரவாதம்', 'வன்முறை', 'மனிதநேயம்' என்ற சொல்லாடல்களுக்குள் நின்று கொண்டு விமர்சனங்களை அள்ளிவீசுவதை பாலசிங்கம் கண்டித்திருப்பதுடன் - போராட்டத்தில் உண்மையான பரிமாணத்தினையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தமிழ் மக்களுக்குத் தேவையாக இருக்கும் புனரமைப்பு - புனர்வாழ்வு உதவிகளுடன் - தெற்கின் பொருளாதார அபிவிருத்தியை இணைத்துக் குழப்புவதையும் - தமிழ் மக்களின் தேவைகள் புறம்பாகவே ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தையும் பாலசிங்கம் தெளிவாக்கியிருக்கிறார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துக்களை, அது தெரிவிக்கும் யதார்த்தத்தை, உண்மையை அமெரிக்கா எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதாக இருப்பதோடு -

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை இனியும் 'பயங்கரவாதம்', 'வன்செயல்' சொல்லாடல் கொண்டு எழுந்தமானமாக விமர்சிக்கும் போக்குத் தவிர்க்கப்படுமா என்பதும்-

தமிழ் மக்களின் பிரச்சினையை, அவர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களை - வழமையான வொஷிங்ரன் பார்வையிலிருந்தோ, கொழும்புப் பார்வையிலிருந்தோ நோக்காது - தமிழர் தரப்பின் நியாயங்களை ஏற்றுக்கொள்ள அமெரிக்கா இனி வருங்காலத்திலாவது முயலுமா என்பதுமே - அந்நாடு நியாயமாக நடந்து கொள்கிறதா என்பதைத் தீர்மானிக்க உதவப் போகின்றன.

### விடுதலைப் புலிகளின் அறிவித்தலைப் பயன்படுத்தி

# பொ.ஐ.முவும், ஜே.வி.பியும் அரசியல் லாபம் தேட முயற்சி

## ஐ.தே.கட்சியின் செயலாளர் குற்றச்சாட்டு

சமாதானப் பேச்சுக்களிலிருந்து புலிகள் தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்திருப்பதைப் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் தமது அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது, புலிகளின் இந்த அறிவிப்பு சமாதான நடவடிக்கைகளில் பின்னடைவுதான். இத்தகையதொரு சம்பவம் நடந்திருக்கக்கூடாது.

இதனைச் சாதகமாக வைத்துச் சமாதான முயற்சிகளைச் சிதைக்கப் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் முயற்சிக்கின்றன.

சமாதான முயற்சிகளில் பின்னடைவுகள் ஏற்படலாம் என்பதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளார். பேச்சுக்கள் இத்தோடு முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டு வருகின்றன.

சமாதானப் பேச்சுக்களின் மூலம் நாம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடுவோம் என அவர்கள் அதிருப்தி கொண்டிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுக்களுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. சமாதானப் பேச்சுக்களைக் குழப்பி, அரசியல் இலாபம்தேட முனைவோருக்குத் தாம் எச்சரிக்கை விடுவதாகச் செனரத் கப்புக்கொட்டுவ மேலும் தெரிவித்துள்ளார்.

# துன்னாலையில் கொல்லப்பட்டவர் நெல்லியடி முகாமில் இருந்தவர்

## பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

துன்னாலைப் பகுதியில் அண்மையில் சடலமாக மீட்கப்பட்டவர், நெல்லியடி இராணுவமுகாமில் படையினருடன் இருந்து பணிபுரிந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை துன்னாலைப் பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட செல்லையா புவனேந்திரராஜா (வயது - 53) என்பவர் மரணமடைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே நெல்லியடி இராணுவமுகாமிலிருந்து காணாமற்போனதாக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# பிக்கப் வாகனங்களை மீள ஒப்படைக்க உத்தரவு

## ஆளுநரின் செயலாளர் பிறப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதேசசபைகளுக்குக் கொடுக்கப்பட்ட பிக்கப் வாகனங்களை மீளக்கையளிக்கும்படி யாழ். வந்த ஆளுநரின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

உள்ளூராட்சி அலுவலகத்தினால் பிரதேசசபைகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் இதுவரை மீளக்கையளிக்கப்படாதது தொடர்பாக ஆளுநரின் செயலாளர் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

உடனடியாக அவர்கள் வாகனங்களைக் கொடுக்கத் தவறினால், பொலிஸார் மூலம் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரா)

# 60 விமானப் பயணிகளை சோதனையிட்டபோதும் எவருக்கும் 'சார்ஸ்' தொற்றுநோய் உறுதியில்லை!

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த அறுபது வெளிநாட்டுப் பயணிகள் 'சார்ஸ்' தொற்றுநோய்க்கு உள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகத்தில் பரிசோதிக்கப்பட்டபோதிலும், எவருக்கும் இந்த நோய் இருப்பது உறுதி செய்யப்படவில்லை என்று விமானநிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

'சார்ஸ்' நோய் பரவியுள்ள சிங்கப்பூர், ஹொங்கொங், தாய்வான், வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்தும் - சீனாவின் பீகிங், ஷாங்ஷி, குவாங்டுங் நகரங்களிலிருந்தும் வந்த, நோய் அறிகுறிகள் காணப்பட்ட பயணிகளே பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர்.

எனினும் இவர்களில் எவருக்கும் நோய் தொற்றியிருப்பதாக உறுதிசெய்யப்படாததால் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை சிங்கப்பூர், கனடா போன்ற நாடுகளில் இருந்து வரும் விமானப்பயணிகளுக்கு விசேட படிவங்களைக் குடிவரவு அதிகாரிகள் கட்டுநாயக்கவில் விநியோகித்து வருகின்றனர். இதன்மூலம் இவர்களுக்கு நோய் ஏதும் ஏற்பட்டால் விசேட கவனிப்பை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் - கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேலதிக மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, மேலதிக மருத்துவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், கொழும்புத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 'சார்ஸ்' தடுப்பு ஏற்பாடுகள் காலி, திருகோணமலைத் துறைமுகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

# பரிசோதனையின் பின்பே மாடுகள் வெட்டப்படுகின்றன

## மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் அறிவிப்பு

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மாட்டிறைச்சிக்கடைகளில் - கொல்களத்தில் வைத்து வெட்டப்படும் மாடுகள் அங்கு 24 மணித்தியாலம் கட்டப்பட்டு பரிசோதனையின் பின்பே விற்பனைக்காக கடைகளுக்கு உறுதிச்சீட்டுடன் எடுத்துச் செல்லப்படுகின்றது. இதனைச் சந்தை மேற்பார்வையாளர் உறுதிசெய்கின்றார் என மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும், கொல்களத்தில் வெட்டப்பட்டும் பசுமாடுகள், மிருக வைத்தியரின் சான்றிதழ் பெறப்பட்ட பின்பே அறுவைக்கு விடப்படுகின்றன எனவும் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

# செல்வா நினைவுத் தூபியில் நினைவுநாள் அஞ்சலி

தந்தை செல்வாவின் 26 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் தந்தை செல்வாவின் நினைவுநாள் அறங்காவற்குழுவின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ். கூட்டணி அலுவலகத்திலும், தந்தை செல்வாவின் நினைவுத்தூபியிலும் நடைபெற்றன.

யாழ்.கூட்டணி அலுவலகத்தில் தந்தை செல்வாவின் திருவுருவப்படத்திற்கும், சிலைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, ரவிராஜ், முத்துலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் நினைவுத் தூபியில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில்- நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், தமிழகம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிறில், தெல்லிப்பளை கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி.சிவமகாராஜா ஆகியோரும் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்- விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொண்டார். (சு)

# கிழக்குக்குத் தனியான ஆளுநரை நியமிக்க ஆதரவு தருமாறு அதாவுல்லா கோரிக்கை!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்துக்குத் தனியான ஆளுநரை நியமிக்கவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் கடிதமூலம் கோரியுள்ளார் அஷ்ரப் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா.

கிழக்கு மாகாணத்தில் பல இனமக்கள் வாழுவதால், அதைத் தனியான மாகாணமாகவே கருதவேண்டும். தனி ஆளுநரும் நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்துக்குத் தனியான ஆளுநரை நியமிக்க வழிசெய்யும் பிரேரணை ஒன்றைத் தாம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளதாகவும், இதற்கு ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அதாவுல்லா மேலும் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

# தளம்பாத நிறைகுடமாக விளங்கிய ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை

மறைந்த ஆயர் தியோகுப்பிள்ளை யாழ்.திருச்சபையின் தலைவர் மட்டுமல்ல, ஈழத்தமிழர் சமுதாயத்தில் .மதிக்கப்படும் ஒரு பெரியார். கற்றோர் அவையில் முன்னிடத்து வைக்கப்படும் கல்விமான். மதிநுட்பமும், அஞ்சாமையும் வாய்ந்த தலைவர். நிறைவான இறைஞானமும், அனைவரும் தலைவணங்கும் ஆளுமையும் உடையவர். ஆயரின் கடந்த காலப்பணிகளைக கருத்திற்கொண்டு யாழ்.பல்கலைக்கழகம் அவரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

### இளமையும் அழைப்பும்

இவர் கரம்பொன் என்னும் ஊரில் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி பிறந்தார். குடும்பத்தில் பதினொரு பிள்ளைகளில் இவர் கடைசிப்பிள்ளை. விசுவாசத்தின் தொட்டிலாக விளங்கிய இவரது குடும்பம்- இவருக்கு விசுவாசத்தையும், கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்தது. சிறு வயதிலிருந்தே குருவாக வரவேண்டும் என்ற இவரது ஆவல் பெற்றோருக்கும் உவப்பாக இருந்தது. கரம்பொன் தமிழ்ப் பாடசாலையில் படிக்கும்போதே இவரது போக்கைக் கண்டு எல்லோரும் இவரை 'சின்னச் சுவாமி' என அழைத்தனர். பின்னர் சிறிதுகாலம் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றபின், புனித மடுத்தீனார் குரு மடத்தில் சேர்ந்து, புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது படிப்பைத் தொடர்ந்தார். அவர் எப்போதுமே வகுப்பில் முதல் மாணவன்தான்.

### குருத்துவக் கல்வி

அந்நாட்களில் பெரும்பாலும் அ.ம.தி குருக்களே யாழ்.மறை மாவட்டத்தில் பணியாற்றி வந்தனர். மறைமாவட்டக் குருக்கள் சிலரையாவது உருவாக்கவேண்டும் என்று திருச்சபை கருதியதால், ஆயர் குருத்துவக் கல்வியை மேற்கொள்ளுமாறு 1935 இல் ரோமாபுரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்குள்ள மறைபோதகக் கல்லூரியில் தமது குருத்துவக் கல்வியை மேற்கொண்டார். 'செய்வன திருந்தச்செய்' என்ப தற்கமைய கல்வியிலும், விளையாட்டிலும், இறைபக்தியிலும் சிறந்து விளங்கிய இவர், அக்கல்லூரியின் வரலாற்றிலேயே தலைசிறந்த மாணவருள் ஒருவர் என ஆசிரியரின் நன்மதிப்பைப் பெற்றார். 1941 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட போதிலும், இரண்டாம் உலக யுத்தம் காரணமாக அவர் உடனடியாக இலங்கைக்குத் திரும்பமுடியாதிருந்தது. ஆகவே, அவர் தொடர்ந்து மேற்கல்வி கற்று, இறையியல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

### குருத்துவப் பணி

1945 இல் சுவாமியார் இலங்கை திரும்பியபோது, யாழ்.பேராலயத்தில் சிறிதுகாலம் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். ஆனால், பங்குத்தளங்களைவிட கல்வித்துறையே அவருக்கு ஏற்றதாக அமைந்தது. அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, இளவாலை புனித



ஹென்றியரசர் கல்லூரி, கொழும்புத்துறை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் அவர் 17 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றினார். சிறந்த ஆசானாகவும், நிர்வாகியாகவும் மட்டுமல்லாது, சிறந்த ஆன்மீக வழிகாட்டியாகவும் விளங்கினார்.

1963 இல் இளவாலைப் பங்குத்தந்தையாகவும், இளவாலை மறைக்கோட்ட முதல்வராகவும் நியமனம் பெற்றார். ஆனால், மூன்று ஆண்டுகளுக்குள் அவர் திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

இலங்கையில் ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட்ட தமிழரான முதல் மறைமாவட்டக் குரு இவரே.

### திருமலை - மட்டுநகர் துணை ஆயராக

ஆயர் இப்பதவியிலிருந்து ஐந்து ஆண்டுகளும், அப்போதைய ஆயர் பேரருட்திரு இக்னேஸியஸ் கிளெனிக்கு அவரது மேய்ப்புப் பணியில் உறுதுணையாக விளங்கினார். வத்திக்கான் சங்கத்தின்பின், தமிழ்மொழி- திருச்சபையின் பாவனைக்கு வந்தபோது, தமிழைப் போதியளவு அறிந்திராத ஆயர் கிளெனிக்குத் துணையாக மக்களுடன் தொடர்பு கொள்வதற்கும், வழிபாடுகளை நடத்துவதற்கும், போதனை செய்வதற்கும் ஒரு தமிழ் ஆயர் நியமிக்கப்பட்டது மக்களால் வரவேற்கப்பட்டது. ஆயர் தியோகுப்பிள்ளை அங்குள்ள மேய்ப்புப்பணிச்சபையின் முழு நிர்வாகத்தையும் பொறுப்பேற்று, அதற்கு ஒரு யாப்பு அமைத்துக் கொடுத்தமை- பொதுநிலையினர் உற்சாகத்துடன், செயற்பட வழியமைத்தது. ஆயரின் மற்றொரு சிறப்பான பணி- தேத்தாத்தீவு புனித யூதாததேயு சிற்றாலயத்தில் நோயாளருக்கு விசேடமான ஆசீர்வாதம் அளித்து, அவர்கள் ஆன்ம சரீர நலன்பெற உதவியமையாகும்.

### யாழ்.மறைமாவட்டத்தில் மறைப்பணி

ஆயர் தியோகுப்பிள்ளை 1973 ஜனவரி 9 ஆம் திகதி யாழ்.மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றார். அவர் பதவி வகித்த 20 ஆண்டுகளும் ஈழத்தமிழர் வரலாற்றில் மிக இக்கட்டான காலகட்டமாகும். நாட்டில் நிலவிய கொந்தளிப்பினாலும், உள்நாட்டுப் போரினாலும் மக்கள் பெரிதும் பாதிககப்பட்டநிலையில், மறைமாவட்டத்தின் நிர்வாகம் மிகவும் கடினமாயிற்று. இத்தகைய நிலையிலும் தமது மதியூகத்தாலும், இறைவனுடைய அருளாலும் அவர் யாழ்.திருசசபையைப் பலவித இடர்களின் நடுவே திறமையாக வழிநடத்தினார். எத்தகைய நெருக்கடியான நிலையிலும், எப்பக்கமும் சாராமல் மக்கள் நலனையே கருத்திற்கொண்டு செயலாற்றினார். போரின் உக்கிரத்தின் மத்தியிலும் மறைப்பணி தடையின்றி நடைபெற ஆவனசெய்தார்.

துறவறச்சபை சாராத முதல் யாழ்.ஆயரான இவர், துறவறசபைகளின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார்.

*(நன்றி: பாதுகாவலன்)*

# தென்னிலங்கையை திகைக்க வைத்த புலிகளின் பேச்சு விலகல் அறிவிப்பு!

## தெற்குத் திசையினிலே
## கொழும்பிலிருந்து இந்திரஜித்

தென்னிலங்கையின் மக்கள் ஒரு கணம் திகைத்து நின்றனர். மீண்டும் போர் வந்துவிடுமோ? என்ற அச்சம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளை இதுவரை காலமும் போரில் வல்ல



ரணில்

வர்கள் என தென்னிலங்கை மக்கள் உணர்ந்திருந்தாலும், அதனை வெளியிடுவதற்கு அவர்களின் மனதிலிருந்த இனவாதப்போக்கு இடம் கொடுக்கவில்லை.

தெற்கிலே படையினர் அல்லது பொலிஸார் மக்கள் மீது ஏதாவது கெடுபிடிகளை நடத்தும்போது, அல்லது தாக்குதல் நடத்தும் வேளைகளில், சிங்களப் பொதுமக்கள் பொதுவாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரைப் போற்றுவது நடைமுறையில் இருந்து வந்த ஒன்றாகும். மாவனல்லையில் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்ட வேளையில், கொழும்பில் முஸ்லிம் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதன்போது - முஸ்லிம் மக்களால் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நிர்வாகம்தான் எங்களுக்குப் பொருந்தும் என்ற கோஷம் எழுப்பப்பட்டது. இவ்வாறாக கோஷிக்கப்பட்ட வார்த்தைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் வல்லவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தியது.

இந்த கோஷத்தின் வலிமை போர்நிறுத்த உடன்பாட்டின்போது தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் குறைந்தே காணப்பட்டது. அரசாங்கம், தமது வலிமையைச் சர்வதேச நாடுகளுடன் இணைந்து உயர்த்திக்கொள்வதாக, தமிழீழ விடுதலைப் புலிகளதும் சர்வதேச சமூகத்தினதும் அழுத்தத்திற்கு உட்பட்டுவிட்டார்கள் என்ற எண்ணமே சிங்கள மக்கள் மத்தியில் காணப்பட்டது.

இதனால் - அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சாணக்கியத்தைச் சற்றுக்குறைத்தே மதிப்பிட்டனர். ஆயினும், இன்று இந்த நிலைமை மாறிவிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள், போரில் மட்டுமல்ல, அரசியல் நகர்விலும் சாணக்கியர்கள் என்ற எண்ணம் பரவிவிட்டது.

இதற்கு ஒரு உதாரணமாக - போர்நிறுத்த உடன்பாட்டின் கூடுதல் நன்மைகள் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சென்றடைந்துவிட்டன. எனவே, நடைமுறைச் சமாதானப்



பாலா

பேச்சுவார்த்தைகள் தமிழீழத்தைப் பெற்றுக் கொடுத்துவிடும் என்று குரல் எழுப்பிய மகாசங்கத்தினர், ஜனாதிபதி உட்பட எதிர்க்கட்சியினர்- தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்ததும், தமது உண்மை நிலைப்பாட்டை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு உடன் திரும்பவேண்டும். கடந்த ஒருவருட காலமாகச் சமாதான இயல்பு நிலையை உருவாக்கித்தந்த பேச்சுவார்த்தையைவிட்டு அவர்கள் விலகிச் செல்லக்கூடாது என மகாசங்கத்தினர் வலியுறுத்தினர். ஜனாதிபதி முன்னர் காட்டிய நிலைப்பாட்டைக் காட்டிலும், தற்சமயம் மாறுபட்ட நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் கீழ் - தமிழீழ விடுதலைப் புலிகள் முழுமையாக நன்மையடைந்து விட்டார்கள் எனக் கூறிவந்த அவர், தற்சமயம் அவர்கள் முன்வைத்திருக்கின்ற கோரிக்கைகளில் சில ஏற்றுக்கொள்ளக்கூடியவை எனத் தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணிகூட புலிகளைச் சாடிக்கொண்டே போர் முன்னெடுப்பொன்றை நாடு மீண்டும் எதிர்கொள்ளத் தயாராக இல்லையெனக் கூறியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கவேண்டும், அப்போது இலங்கையிலுள்ள பயங்கரவாதப் பிரச்சினை தீர்ந்துவிடும் எனக் குறிப்பிட்டுவந்த சிஹல உறுமய - புலிகளின் வலுவிற்கு எதிராக - இந்தியாவின் சக்தியையே வேண்டிநிற்கிறது. பெரும்பாலான மலையகக் கட்சிகள்- தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை வரவேற்றுள்ளன. எனினும், அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமது கருத் துக்களை உடனடியாக வெளியிடவில்லை.

இந்தநிலையில் இலங்கையின் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள அறிக்கை- தமிழீழ விடுதலைப் புலி



சந்திரிகா

கள் அரசியல் மட்டத்தில் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கும் தொனியில் அமைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் இணைந்திருக்க வேண்டுமானால், அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனவும், இதனை அரசாங்கம் அவர்களிடம் வலியுறுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன.

இந்த எதிர்க்கட்சிகளில் - சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பவற்றுடன் மலையகக் கட்சியான இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் அடங்கியிருக்கின்றன. இதில் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி- தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் இரட்டைக் கொள்கையைப் பின்பற்றி வருகின்ற கட்சியாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலமே தமிழ்மக்களின் பாதுகாப்பு என இந்தக் கட்சியின் தலைமைகளில் ஒன்று கூடும், அதேநேரம் மற்றொரு தலைமை - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைளுக்கு இணங்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இதுதான் இன்றைய தென்னிலங்கை நிலவரமாகவுள்ளது.

## மாணவியை தாக்கிய வழக்கிலிருந்து அதிபரை நீதிமன்றம் விடுவித்தது!

பாடசாலை அதிபரொருவர் மாணவியொருவரை கையாலும், காலாலும் அடித்து உடல் வேதனையை உண்டாக்கினார் எனத் தொடரப்பட்ட வழக்கில், அதிபரை குற்றமற்றவரெனக் கண்ட நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

மேலைப் புலோலி சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் எஸ்.பரமானந்தம் என்பவர் அதே பாடசாலையில் கல்விகற்கும் நாகேந்திரராஜா சுமதி என்ற மாணவியை கையாலும், காலாலும் அடித்து உடல் வேதனையை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு, விசாரணை முடிவில் அதிபர் குற்றவாளி அல்ல எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். (17)

## இல்லவிளையாட்டு போட்டி

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளும்படி கேட்டுள்ளனர்.

# பக்தாத் ஆயுதக்கிடங்கு மீது தாக்குதல்; தொடர்ந்த வெடிவிபத்தில் 40 பேர் பலி!

நேற்று பக்தாத்திலிருந்த ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட தொடரான வெடிவிபத்தில் சுமார் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

எதிரிப் படையினர் சிலர் - லட்சக கணக்கில் துப்பாக்கி ரவைகள், மோட்டார் குண்டுகள் என்பன சேமித்து வைத்திருந்த இந்த ஆயுதக்கிடங்கு மீது, தீப்பந்தங்களை எறிந்ததால், இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவிலான இந்த ஆயுதக்கிடங்கு, கட்டுப்படுத்தமுடியாத நிலையில் தொடர்ந்து வெடித்து தீப்பற்றிய வண்ணம் இருந்தது.

மக்கள் குடியிருப்புக்களின் மத்தியில் - அமெரிக்கா ஆயுதக்கிடங்கை வைத்திருந்தமையினாலேயே, இந்த மனிதப் பேரழிவு ஏற்பட்டதாக ஈராக்கிய மக்கள் குற்றஞ்சாட்டினர்.

ஈராக்கிய மக்கள் இச்சம்பவம் தொடர்பாக அமெரிக்க எதிர்ப்புப் பேரணியொன்றையும் நடத்தினர். எனினும், இந்த வெடிமருந்துக் கிடங்கை சதாம் அரசே குடியிருப்புகளின் மத்தியில் அமைத்திருந்ததென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இஸ்லாமிய ஈராக்; அரசமைப்பு நிபுணர் வலியுறுத்து!

ஈராக்கை ஒரு இஸ்லாமிய ஜனநாயக நாடாக அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டுமென ஈராக்கின் புதிய அரசியலமைப்பை வரைந்துவரும் அமெரிக்க சட்டத்துறை பேராசிரியர் நோஹ் பீல்ட்மன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அரசியல்யாப்பு - அரசையும் கிறிஸ்தவ மதத்தையும் பிரித்தே வைத்திருக்கிறது. ஆனால், இம்மாதிரியான வடிவம் தீவிர முஸ்லிம் நாடுகளுக்கு பொருந்தாது என அவர் தெரிவித்தார்.



பக்தாத்தில் ஆயுதக்கிடங்கு வெடித்ததில் சிதைந்துபோன கட்டடத்தையும், படுகாயமடைந்த ஒருவரையும் படங்களில் காணலாம்.

## அசீஸுக்கு அரசியல் புகலிடமா? பிரிட்டிஷ் அரசாங்கம் மறுப்பு!

அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்த ஈராக் முன்னாள் பிரதிப் பிரதமர் தாரிக் அசீஸ், ஜனாதிபதி சதாம் பற்றிய தகவல்களை அளித்தால் பிரிட்டன் அசீஸுக்கு புகலிடம் வழங்குவதற்கு சம்மதித்துள்ளதாக வெளியான செய்திகளை பிரிட்டிஷ் உள்துறை செயலகம் மறுத்துள்ளது.

அசீஸ் - பிரிட்டனில் தஞ்சம் கோரியுள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தி தொடர்பாகக் கருத்து தெரிவித்த அந்நாட்டு உள்துறை செயலகம், மனித உரிமைகளை மதிக்காத, முன்னாள் கொடுங்கோல் ஆட்சியில் இருந்த உறுப்பினர் ஒருவருக்கு பிரிட்டன் அரசியல் புகலிடம் வழங்காது எனக் குறிப்பிட்டது.

அசீஸ் மூலம் சதாம் குறித்தும், பேரழிவு ஆயுதங்கள் குறித்தும் பயன்மிக்க தகவல்கள் கிடைக்கலாம் என அசீஸை விசாரித்துவரும் சி.ஐ.ஏ. அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அசீஸ் தாம் சரணடைய முன்னர் அமெரிக்க அதிகாரிகளுடன் இரகசியமுறையில் பேச்சுக்களை நடத்தியிருந்ததாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர். அசீஸ் ஆங்கிலம் நன்கு பேசக்கூடியவர் என்பதும், ஈரானுடனான போரின்போது ஈராக்கிற்கு அமெரிக்க உதவியைப் பெற்றுக்கொடுப்பதில் முக்கிய நபராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இதேசமயம், சிரிய எல்லை அருகே கைதான முன்னாள் ஈராக் புலனாய்வுப்படை அதிகாரி பாரூக் ஹிசியும் அமெரிக்க அதிகாரிகளால் விசாரணைசெய்யப்பட்டு வருகிறார்.

உலகவலம்

## இந்திய வானொலி நிலையம் மீது துணிகர தற்கொலைத் தாக்குதல்!

### காஷ்மீரில் ஐந்து பேர் உயிரிழப்பு



காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரிலுள்ள ஆகாஷவாணி மற்றும் தூரதர்ஷன் நிலையங்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இரண்டு இந்தியப் படையினரும், மூன்று தற்கொலை படையாளிகளும் இறந்தனர்.

கடும் பாதுகாப்பு மிகுந்த தொலைக்காட்சி, வானொலி நிலைய வளாக வாயிலைத் தாண்டி, தாம் ஓட்டிவந்த காரை, நிலைய முகப்பில் வைத்து தற்கொலைத் தாக்குதலாளர்கள் வெடிக்கச் செய்தனர்.

இதேசமயம், இராணுவச் சீருடை அணிந்த வேறு சிலர் கட்டடத்தினுள் நுழையமுயன்றபோது, அங்கு நின்ற இந்தியப் பாதுகாப்புப் படையினருக்கும் அவர்களுக்கும் இடையே அரை மணிநேர துப்பாக்கிச் சமர் நடைபெற்றது. இதில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவத்தினர் தெரிவித்தனர். அல் - மதீனா குழு என்ற அமைப்பு இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

## வின்னி மண்டேலாவுக்கு 5 வருட சிறை



தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதியும், விடுதலை வீரருமான நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னி மண்டேலாவுக்கு (வயது 66) ஊழல் மற்றும் திருட்டுக் குற்றச்சாட்டில் ஐந்து வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 43 ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் 25 திருட்டுக் குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

வின்னி மண்டேலா, முன்னர் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் முக்கிய போராளியாகவிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காலஞ்சென்ற ஆயருக்கு பல தரப்பினரும் அஞ்சலி

நேற்றுமுன்தினம் காலமான யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு - நேற்றுக் காலை தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா ஆகியோர் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இதேவேளை - வடபகுதி இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகளும் மறைந்த ஆயருக்குத் தமது அஞ்சலியைத் செலுத்தினர்.

முன்னாள் ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பூதவுடல் யாழ். ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோதே இவர்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

அங்கு வைக்கப்பட்ட அனுதாபக் கையேட்டிலும் அவர்கள் கையெழுத்திட்டனர்.

இதேவேளை -

பெருந்திரளான மக்களும், குருக்கள், துறவிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் மறைந்த முன்னாள் ஆயருக்கு தமது அஞ்சலியைச் செலுத்திவருகின்றனர். (லி)



மறைந்த ஆயருக்கு அஞ்சலி செலுத்தும் பொதுமக்களை முதற் படத்திலும், படையினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லிவிங்ஸ்டன்)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 21 - 11 - 1979 |  | 27 - 04 - 2000 |

### கப்டன் செய்யவன்/விக்கி

(பூபாலசிங்கம் விஜயகுமாரன், ஒலுமடு, நெடுங்கேணி)

வித்தாகி வீழ்ந்து
தாயக விருட்சத்துக்கு
விதையாகி
நீ எழுவாய்!
வற்றாத வீரமுடன்
வாழ்ந்த உன் வரலாறு
தாயகத்தின்
துயர் களையும்
இது உறுதி!!

ஓயாத அலைகள்- 3 சமரில் இம்மாவீரருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்துப் போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்.

(சி-876)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




மிற்சுயி
ஸ்தாபனத்தின்
புதிய படைப்பு
ஹினோடே
சிமெந்து
(சி.783)
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

## தேசிய...

தலைவரின் எண்ணக் கருவிலிருந்து உருவான பேரவையை சிறந்தமுறையில் கட்டிவளர்க்க மக்கள் முன்வரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து- பேரவையின் செயற்பாடுகளை முன்னெடுக்க கிராமம், பிரதேசம், கோட்டம், மாவட்டம் என்பன தோறும் வழிநடத்தல், நடைமுறைப்படுத்தல் குழுக்களும் அமைக்கப்பட்டன.

ஊரகம், பிரதேசம், கோட்டம், மாவட்டம் என பேரவையின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு, கிராம மட்டத்தில் இருந்து - தேசப்பற்று மிக்க கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, மனிதநேயம் போன்ற சிறந்த விழுமியங்களை உடைய கொள்கையாளர்கள் பேரவையின் உறுப்பினர்களாகி - குறிக்கோளை நிறைவேற்றப் பாடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சு,09)

## பிரதமரின் பதில் நடவடிக்கையை...

அவர்களுக்கு சில நம்பிக்கைகளைக் கொடுத்தது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதுவரை அப்படி எதுவுமே நடைபெறவில்லை. எனவே, மக்களிடையே விரக்தியும், நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னணியிலேயே, நாம் எமது இன்றைய நிலையைக் கையாளவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

தாம் அகதி முகாம்களிலேயே வசிப்பதாகவும், தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாதிருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது அவர்கள் எதிர்நோக்கும் ஓர் அடிப்படைப் பிரச்சினை.

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் எனக்கூறி, படையினர் அகல மறுத்துத் தங்கியிருக்கும் இடங்கள், வளமான தோட்டப் பகுதிகள் நிறைந்த இடங்களாகும். இவ்வாறான 47 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மக்கள் திரும்பிச் செல்லவில்லை.

இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வரையில், ஜூனில் ஜப்பானில் நடைபெறும் நிதியுதவி மாநாட்டில் புலிகள் கலந்துகொள்வதில் எந்த அர்த்தமுமில்லை.

புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைக்க என்ன செய்யவேண்டும் என்பதைப் பிரதமர் அறிவார். கலாநிதி பாலசிங்கத்தின் கடிதத்துக்குப் பிரதமரின் பதிலை எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறாயினும் புலிகள் போரை ஆரம்பிக்கப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

STP
எமது சாவகச்சேரிக் கிளையில்
பின்வரும் பாடநெறிகள்
01.05.03 முதல்
ஆரம்பிக்கப்படவுள்ளன.
மாணவர்கள்
பதிவினை மேற்கொள்ளவும்.
Dip. In MS Office
Desktop Publishing
baby dod com (சிறுவர்களுக்கானது)
Director Sankaththanai, Chava.

## தெஹிவளையில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

தெஹிவளை, நெடிமல எனுமிடத்தில் இராணுவ புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்த அசோக் என்பவரை, முச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாதோர நேற்று மாலை 7.30 மணிக்கு சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடி விட்டனர்.

கொல்லப்பட்டவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என அறியமுடிகின்றது. (01)

## முஸ்லிம்களுக்கு...

இச்சந்திப்பின்போது முஸ்லிம் மக்களால் சில குறைகள் முன்வைக்கப்பட்டபோது, அவற்றை கூடிய விரைவிலேயே தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் - யாழ். முஸ்லிம் மக்கள் பேரவைத் தலைவர் முபீன், கிராம சேவையாளர் என்.சுந்தரராஜா, யாழ். பள்ளிவாசல் மௌலவி அப்துல் கபூர் முகம்மத் இர்பான், மற்றும் முஸ்லிம் பெரியார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(சு)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திரமும், 1972 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு - அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக்குறிப்பு - புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

ப.கிருஷ்ணமூர்த்தி
(தேவி அச்சக ஒழுங்கை)
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்:- 2789
(323)

## மரண அறிவித்தல்

### கனகசபை அரசரத்தினம்

வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபை அரசரத்தினம் (முன்னாள் தினபதி. டெயிலிமிரர் செய்தியாளர்) நேற்று 26.04.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகதாம்பிகை (தாதி உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)யின் அன்புக் கணவராவர்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்
அ.ஜெகதாம்பிகை
(மனைவி)
(329)

மாபெரும் மலிவு விற்பனை
சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட யப்பான் நாட்டுத் தயாரிப்பிலான
சொனி, நஷனல், பனசொனிக், ரீவி, டெக், நேடியோ, அதற்குரிய
உதிரிப்பாகங்கள் என்பன விற்பனைக்கு உண்டு


ஒரு சில தினங்களுக்கு மட்டுமே இந்த அரிய சந்தர்ப்பம்!
இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.
ஹன் மல்ரி ரேட் சென்ரர்
142, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
(326)


ஏப்ரல் 28
விடுதலைப் புலிகளின்
வீரம் செறிந்த

ஆனையிறவு வெற்றி விழா




"தீச்சுவாலை" முறியடிப்புச் சமரின்
நிறைவு விழாவும் அன்றே!

- அனைத்துப் படைப்பிரிவுகளினதும் அணிநடை
- கனரக ஆயுதக் கண்காட்சி
- போர்முனைத் தளபதிகளின் கருத்துரைகள்
- போராளிக் கலைஞர்களின் எழுச்சி நிகழ்வுகள்

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.